செ.வெ.எண்: 59 நாள்:22.08.2016

# பத்திரிகைச் செய்தி

அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்தில் அளிக்கப்படும் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான முதல் நிலை தேர்வுக்கு பயிற்சி அளிப்பதற்கு மாணவர்களை தேர்வு செய்யும் பொருட்டு 13.11.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ள நுழைவுத் தேர்வில் கலந்து இளங்களை பட்டப்படிப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள் பெற்றுள்ள தகுதி வாய்ந்த ஆதிதிராவிட/ பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினனர் மற்றும் இதர வகுப்பினரை சார்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்ப படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்தநுழைவுத் துறைத் தேர்வில் கலந்து கொள்வதற்கான (OMR) விண்ணப்ப படிவங்கள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 22.08.2016 முதல் 22.09.2016 மாலை 5.45 வரை வழங்கப்படும்.

**இத்துறைத்தேர்வில் கலந்து கொள்வது தொடர்பான விதிமுறைகள் :**

**கல்வி தகுதி :**

குறைந்த பட்ச கல்வித் தகுதியாகிய இளங்கலை பட்டப்படிப்பு ( B.A., B.Sc., B.Com., மற்றும் தொழிற்பட்டப்படிப்பான B.E., MBBS, B.D.S., B.V.Sc., B.Sc(Agri)) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள் அனைத்தும்.

**வயதுவரம்பு :**

குறைந்தபட்ச வயது அனைத்து வகுப்பினருக்கும் : 21
அதிகபட்ச வயது இதர வகுப்பினர் : 32

**மேற்குறிப்பிட்ட உச்ச வயது வரம்பிலிருந்து கீழ்க் கண்டவர்களுக்கு விலக்களிக்கப்படுகிறது.**

ஆதிதிராவிடர்,அருந்ததியர் மற்றும் பழங்குடியினர் : 5 வருடம்

பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் - முஸ்லிம்)
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்) : 3 வருடம்

மாற்று திறனாளிகள் : 10 வருடம்

1.8.2017 நாளின்படி விண்ணப்பங்கள் பெற தகுதியுள்ள மாணவ/மாணவியர்களின் வயது / பிறந்த நாள் விவரம் (as on 01/08/2017)

| Community | Years | Date of Birth |
|---|---|---|
| SC(A), SC,ST | 21 to 37 Years | 31.07.1980-க்கு பின் 31.07.1996 வரை |
| MBC/BC/BC(M) (OBC) | 21 to 35 | 31.07.1982-க்கு பின் 31.07.1996 வரை |
| OC | 21 to 32 | 31.07.1985-க்கு பின் 31.07.1996 வரை |

1) இந்த நுழைவு தேர்வு குறித்த OMR விண்ணப்பங்களை பெற எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை.
2) இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற தமிழ்நாட்டை சார்ந்த மாணவ / மாணவியர்கள் மட்டுமே தகுதி உடையவர் ஆவர்.
3) பாண்டிச்சேரி உட்பட இதர மாநிலத்தை சார்ந்த மாணவர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.
4) கல்வி, வயது, சாதி, குடும்ப அட்டை நகல் இருப்பிடச்சான்றிதழ்களின் சான்றொப்பமிட்ட நகல்கள் கண்டிப்பாக விண்ணப்பம் பெறும் சமயத்தில் சமர்ப்பித்திட வேண்டும்.
5) பூர்த்தி செய்யப்பட்ட (OMR) விண்ணப்பபடிவங்கள் புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் மீள சமர்ப்பித்திட கடைசி நாள் :22.09.2016 மாலை 5.45 மணியாகும்.

**தேர்வு மையங்கள்:**

சென்னை, கோயமுத்தூர், கூடலூர், தர்மபுரி, மதுரை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் வேலூர்.

**விண்ணப்பிக்கும் முறை:**

தகுதியுடையவர்கள் அலுவலக வேலை நாட்களில் தங்களது சாதி மற்றும் பட்டப்படிப்பு சான்றுகளின் நகல்களை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இயங்கி வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கல்வி மற்றும் இதர தகுதி குறித்த சான்றுகளின் சான்றொப்பம் மிட்ட நகல்களுடன் சமர்ப்பித்து உரிய விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 29.09.2016 மாலை 5.45 மணிக்குள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் திரும்ப ஒப்படைத்திட வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**